

திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் 13வது வார்டு அ.தி.மு.க. முன்னாள் பிரதிநிதி தங்கராஜு தலைமையில் 75 பெண்கள், கழக துணை பொதுச் செயலாளர், காங்கேயம் கழக வேட்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகர்மன்ற தலைவர் சூர்ய பிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சட்டமன்ற தேர்தலையொட்டி, தி.மு.கழகத்தின் வெற்றி வேட்பாளராக இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் களம் காணும் டாக்டர் அ.சுபேர் கான் அவர்களை ஆதரித்து சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பணிமனையானது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி, சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர் காசி முத்துமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.இளைய அருணா, பகுதி கழகச் செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா. செந்தில் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் நா.மனோகரன், வர்த்தகர் அணி துணைச் செயலாளர் பி.டி.பாண்டிசெல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# 139வது வட்டத்தில் வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வாக்கு சேகரிக்கிறார்!

## வட்ட செயலாளர் அட்கோ கமலநாதன் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.5-

சைதை மேற்குப் பகுதி 139வது வட்டத்தில் வட்டக் கழக செயலாளர் அட்கோ கமலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வேட்பாளர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் நாளை (06.04.2026 திங்கட்கிழமை) காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை ஜோதிராமலிங்கம் நகர், ராஜாபாதர் தெரு, கிருஷ்ணன் தெரு, பாஸ்கரன் தெரு, கன்னியப்பன் தெரு, வி.கே.மகாதேவன் தெரு, முரசொலிமாறன் தெரு, கங்கையம்மன் கோயில் தெரு, மாணிக்கம் தெரு, சிவகுரு தெரு, பழனியப்பன் தெரு, ராகவன் தெரு, இளங்கோ தெரு, முருகேசன் தெரு, வெங்கடாச்சலம் தெரு,

ஜானகிராமன் தெரு, எஸ்.பி.சிதம்பரம் சாலை, வடிவேல் தெரு, பூங்காவனம் தெரு, கோவிந்தசாமி தெரு, கிண்டி ரத்தினம் தெரு, அப்பையா மேஸ்திரி தெரு, கங்கையம்மன் கோவில் தெரு, முத்தமிழ் நகர், ஏரிக்கரை தெரு, பள்ளிக்கூட தெரு, பள்ளிக்கூட 1 முதல் 8 வரை உள்ள தெருக்கள், மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை, முத்துமாரியம்மன் கோவில் தெரு, ஆர்.வி.நகர் 75வது தெரு, 76வது தெரு, 69 (ஏ) தெரு, 69வது தெரு, 72வது தெரு, 74வது தெரு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுவாரிய குடியிருப்பு பிளாக்குகள், ஐ,ஜே,கே, எம், என், எஸ், ஓ, பி, ஆர்.வி.நகர் 73வது தெரு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பிளாக்குகள் ஏ, ஏஏ, பிளாக்குகள் வரை, 67வது தெரு, 68வது தெரு, ராகவன் காலனி 1 முதல் 5 தெருக்கள் வரை, ' அண்ணாமலை நகர் 1 முதல் 3 தெருக்கள் வரை, பெரியார் ராமசாமி தெரு, பிள்ளையார் கோவில் தெரு, அண்ணா தெரு, காமராஜர் தெரு, வாசுகி தெரு, வ.உ.சி. தெரு, ஜெயராம் தெருவில் நிறைவு பெறுகிறது.

எனவே மேற்கண்ட வாக்கு சேகரிப்பு நிகழ்விற்கு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமை கட்சிகளின் நிர்வாகிகள், 139வது வட்டத்தை சார்ந்த அனைத்து கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் பெருந்திரளாக பங்கேற்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து தருமாறு 139வது வட்ட கழக செயலாளர் அட்கோ கமலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜி.ஜே. மோசஸ் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - எம்.ஶ்ரீதரன் முன்னிலை

# சைதை சி.எஸ்.ஐ. கிறிஸ்துவ ஆலயத்தில் வாக்கு சேகரிப்பு!

## துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஏப்.5

சைதை மேற்குப் பகுதி - சிறுபான்மை நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் ஜி.ஜே. மோசஸ் தலைமையில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து சி.எஸ்.ஐ. கிறிஸ்துவ ஆலயத்தில் வாக்கு சேகரிப்பு நடைபெறுகிறது.

எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வழக்கறிஞர் எம்.ஶ்ரீதரன் எம்.சி. முன்னிலையில் துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்குப் பகுதி சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் பகுதி அமைப்பாளர் ஜி.ஜே.மோசஸ் தலைமையில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினரும், 140வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.ஶ்ரீதரன் 140வது வட்ட கழக செயலாளர் ந.தமிழரசு, சிறுபான்மை நலஉரிமைபிரிவு மாவட்ட அமைப்பாளரும், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி கண்காணிப்பாளரு மான சைதைசாதிக் ஆகியோர் முன்னிலையில் சைதாப்பேட்டை அண்ணா சாலையில் உள்ள சி.எஸ்.ஐ மீட்பர் இயேசு ஆலயத்தில் இன்று (05.04.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 6.30 மணியளவில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வேட்பாளர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க உள்ளனர்.

இந்நிகழ்விற்கு பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கலைஇலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி. ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், அட்கோகமலநாதன், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, உள்ளிட்ட மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள், சிறுபான்மை நல உரிமைபிரிவு, பகுதி துணை அமைப்பாளர்கள் எம்.ஜெ.கெவின், ஜோ.அந்தோணி, குமார், சையத்அன்சாரி, கே.அன்சர்கான், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள், பெருந்திரளாக பங்கேற்று வாக்கு சேகரிப்பில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.



திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரன், திருவாலங்காடு மேற்கு ஒன்றியத்தில் அனைத்து ஊராட்சிகளில் ஒன்றிய செயலாளர் கூளுர் எம்.ராஜேந்திரன் தலைமையில் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்போது பொதுமக்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் காஞ்சிபடி சரவணன், சுஜாதா குமார், குமரவேல், ஆர்.யுவராஜ் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

தந்தையை தளபதி

# சிறையில் வைக்கவில்லை! சிறகில் வைத்திருந்தார்!

## கவிப்பேரரசு வைரமுத்து உருக்கம்!

கடைசிக் காலத்தில்
கலைஞர்
சிறைப்படுத்தப்பட்டிருந்தார்
என்ற அரசியல் கூற்று
உண்மைக்கு மாறானது

அதற்கு
நானும் ஒரு சாட்சி

கலைஞரின் உடல்நிலை
மருத்துவத்தின் கைகளுக்கு
மாறிவிட்டது

முதுமை நோயுடைமை
தொண்டைத் துளை
பேச்சின்மை
மருந்துகளின் தாக்கம்
போன்ற காரணங்களுக்காக
மருத்துவர்களின் அறிவுரையைத்
தளபதி மு.க.ஸ்டாலின்
கவனமாகப் பின்பற்றினார்

நோய்த்தொற்றைத் தடுக்கவே
பார்வையாளர்கள்
ஒழுங்குபடுத்தப்பட்டனர்

அவர் ஆயுளை நீட்டிக்கவே
கட்டுப்பாடுகள் திட்டமிடப்பட்டன

வாரம் ஒருமுறை
அல்லது இருமுறை
நான் கலைஞரைச்
சந்திக்கும் வாய்ப்பை
யாரும் தடுக்கவில்லை

மென்மையாய்;
மிக மென்மையாய்
அவர் கையாளப்பட்டார்

கலைஞர் இரண்டாம்
குழந்தை நிலையில் இருந்தார்

தொட்டில் என்பது
ஒரு குழந்தைக்குச்
சிறையாகிவிடாது

தந்தையைப் பிள்ளைபோல்
பாதுகாத்தார் தளபதி

தந்தையை அவர்
சிறையில் வைக்கவில்லை;
சிறகில் வைத்திருந்தார்

தமிழர்கள் அறிவார்களாக



கவிப்பேரரசு
வைரமுத்து



பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தே.மு.தி.க. வேட்பாளர் அனகை டி. முருகேசன் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் ஜமீன் ராயப்பேட்டை படவேட்டம்மன் கோயில் அருகில் இருந்து கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் நிர்வாகிகள் ஆகியோருடன் ஊர்வலமாக சென்று தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்கள். அப்பொழுது பகுதி கழகச் செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, அ.தமிழ்மாறன் மற்றும் கூட்டணிக் கட்சி தலைவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

பெரம்பூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர்

# ஆர்.டி.சேகர் 34 (அ) வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப்.5-

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளரான ஆர்.டி.சேகர் அவர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி இன்று (5.4.2026) நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் வெற்றி வேட்பாளர் ஆர்.டி.சேகர் தெருத்தெருவாக வீடு வீடாக வாக்காளரை சந்தித்து வாக்கு சேகரிக்க உள்ளார்.

ஆகவே மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிகளின் தோழர்கள் மற்றும் பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

தேர்தல் பணிக்குழு பெரம்பூர் சட்டமன்ற தொகுதி

# மலிவும் மடப்பாடியும்!



ரத்த உறவும்
பெத்த புள்ளயும்
இல்லாத ஒருவரது
அந்திம காலம்
எவ்வளவு
கொடுமையானது
என்பதற்கு
அம்மாவின்
இறுதிக் காலமும்...

பெத்த புள்ளையும்
ரத்த உறவும்
அன்பே வடிவாகி இருந்தால்

ஒருவரது
அந்திம காலம்
எப்படிபாசத்தால் நிறைந்து ததும்பும்
என்பதற்கு
முத்தமிழ் அறிஞர் கலைஞரின்
முதுமைக் காலமுமே சாட்சி..
இதனை
உலகமே அறியும்...

அதனால..

வாய்க்குள்
அடங்காத
பல்லோடும்
வாய்மைக்கு
அடங்காத
சொல்லோடும்

நாகரீகமற்று
மலிவாகப்
பேசுவதை
திருவாளர்
மடப்பாடி
நிறுத்திக் கொள்வது உத்தமம்...

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்